## September 16, 2026 – தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

*1. விண்வெளியில் ஆயுதங்களை நிலைநிறுத்தியிருப்பதை அமெரிக்கா முதல்முறையாக அதிகாரபூர்வமாக உறுதிப்படுத்தியுள்ளது.*

*(i) இதுகுறித்து நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அமெரிக்க விமானப்படைச் செயலர் டிராய் மெயின்க், 'எதிரி நாடுகளின் தாக்குதல் நடவடிக்கைகளிலிருந்து கூட்டுப் படைகளைப் பாதுகாக்கும் திறன் கொண்ட புவி சுற்று வட்டப்பாதை விண்வெளிக் கட்டுப்பாட்டு ஆயுதங்களை அமெரிக்கா நிலைநிறுத்தியுள்ளது' என்றார். எனினும், அந்த ஆயுதங்களின் விவரங்கள் மற்றும் அவை எவ்வாறு செயல்படுகின்றன என்பது குறித்து அவர் விளக்கவில்லை.*

*(ii) முன்னதாக 2024-இல், விண்வெளியில் இருந்து செலுத்தக்கூடிய புதிய செயற்கைக்கோள் எதிர்ப்பு ஆயுதத்தை ரஷியா உருவாக்கி வருவதாக அமெரிக்கா தெரிவித்திருந்தது. அப்போது அந்த அச்சுறுத்தல், உடனடியாக எழக்கூடிய ஆபத்து அல்ல என்று வெள்ளை மாளிகை குறிப்பிட்டிருந்தது.*

*(iii) இருப்பினும், அமெரிக்காவின் பிரதான கட்டமைப்பு வசதிகள் செயற்கைக்கோள் தகவல்தொடர்புகளையே பெரிதும் சார்ந்திருப்பதால், ரஷியா மற்றும் சீனாவிடமிருந்து வரக்கூடிய விண்வெளி அச்சுறுத்தல்கள் குறித்த நீண்டகாலக் கவலையை இத்தகவல்கள் வெளிப்படுத்தின.*

*(iv) இதையொட்டி, அதிபர் டிரம்ப் தனது முதல் பதவிக்காலத்தில் (2019-இல்) விண்வெளிப் படையை ஒரு தனிப்பிரிவாக உருவாக்கினார் என்பது குறிப்பிடத்தக்கது.*

*2. அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் தலைமையிலான நிர்வாகத்துடன் வரி மோதல் தீவிரமடைந்துள்ள சூழலில், ஐரோப்பிய யூனியனுடனான ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்தும் நோக்கில் கனடா பிரதமர் மார்க் கார்னி ஐரோப்பிய நாடுகளுக்கு அரசுமுறைப் பயணம் மேற்கொள்கிறார்.*

*(i) கனடாவின் மொத்த ஏற்றுமதியில் சுமார் 70 சதவீதம் அமெரிக்காவை மட்டுமே சார்ந்துள்ள நிலையில், அந்த அதீத சார்புநிலையைக் குறைக்கும் நோக்கில் ஐரோப்பாவுடனான வர்த்தக மற்றும் முதலீட்டு உறவுகளுக்கு மார்க் கார்னி முன்னுரிமை அளித்து வருகிறார். அமெரிக்காவுடன் தொடர்ந்து வர்த்தகம் மேற்கொண்டாலும், மாற்றமடைந்து வரும் புவிசார் அரசியல் சூழலுக்கு ஏற்ப புதிய கூட்டணிகளை உருவாக்குவது காலத்தின் கட்டாயம் என்று கனடா தெரிவித்துள்ளது.*

*(ii) அந்தவகையில், கனடாவின் 2-ஆவது பெரிய வர்த்தகக் கூட்டாளியாகவிளங்கும் ஐரோப்பிய யூனியனின் நாடாளுமன்றம் ஒட்டாவாவில் புதிய அலுவலகத்தைத் திறக்கவுள்ளதுடன், ஐரோப்பிய பாதுகாப்பு தளவாடக் கொள்முதல் திட்டத்திலும் கனடா இணைந்துள்ளது.*

*3. 2029 உலக தடகள சாம்பி யன்ஷிப், கென்யா தலைநகர் நைரோபியில் நடைபெறவுள் ளது. ஆப்பிரிக்காவில் இந்தப் போட்டி நடைபெறவுள்ளது இதுவே முதல்முறையாகும்.*

*4.சர்வதேச செஸ் சம்மேளனத்தின் (ஃபிடே) 46-ஆவது செஸ் ஒலிம்பியாட் போட்டி, உஸ்பெகிஸ்தானில் புதன்கிழமை (செப். 16) தொடங்குகிறது.*

*(i) அணிகளுக்கான போட்டியாக நடைபெறும் இதில், இந்தியா உள்பட நூற்றுக்கும் மேற்பட்ட நாடுகளில் இருந்து, ஓபன் பிரிவில் 208 அணிகளும், மகளிர் பிரிவில் 191 அணிகளும் பங்கேற்கின்றன. போட்டியை நடத்தும் உஸ்பெகிஸ்தான், இரு பிரிவுகளிலும் தலா 3 அணிகளை களமிறக்கியுள்ளது.*

*(ii) கடந்த 2024-இல் ஹங்கேரி தலைநகர் புடாபெஸ்டில் நடைபெற்ற 45-ஆவது செஸ் ஒலிம்பியாட் போட்டியில் ஓபன் மற்றும் மகளிர் என இரு பிரிவுகளிலுமே இந்தியா சாம்பியன் பட்டம் வென்றது நினைவு கூரத்தக்கது. நடப்பு சாம்பியனாக இந்த ஆண்டு களம் காணும் இந்திய அணிகள், பட்டத்தைத் தக்கவைக்கும் முனைப்புடன் இருக்கின்றன. நடப்பு உலக சாம்பியனான டி. குகேஷ், நடப்பு மகளிர் உலகக் கோப்பை சாம்பியனான திவ்யா தேஷ்முக் உள்பட, போட்டியில் பங்கேற்கும் இந்திய அணியினர் உஸ்பெகிஸ்தான் புறப்பட்டுச் சென்றனர். ஓபன், மகளிர் என இரு பிரிவுகளிலுமே டாப் 5 அணிகளில் இந்தியா முதலிடத்தில் இருக்கிறது.*

*5.ஆசிய விளையாட்டுப் போட்டிகளுக்கு இந்திய வீரர், வீராங்கனைகள் தயாராவதற்காக சுமார் ரூ.800 கோடி வரை செலவிடப்பட்டுள்ளதாக, மத்திய விளையாட்டு அமைச்சகம் தெரிவித்தது.*

(i) ஜப்பானின் அய்சி - நகோயா நகரில் வரும் 19-ஆம் தேதி தொடங்கும் 20-ஆவது ஆசிய விளையாட்டுப் போட்டிகளில், இந்தியாவிலிருந்து 267 வீரர்கள், 234 வீராங்கனைகள் என, 501 பேர் கொண்ட குழு பங்கேற்கிறது. அவர்கள் 36 விளையாட்டுப் பிரிவுகளில் களம் காணவுள்ளனர். இதில் 310 பேருக்கு இது அறிமுக ஆசிய போட்டிகளாகும்.

(ii) 2022 ஹாங்ஸூ ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் 28 தங்கம், 38 வெள்ளி, 40 வெண்கலம் என 106 பதக்கங்கள் வென்றதே இந்தியாவின் அதிகபட்சமாக உள்ளது.

6.ஐசிசி மகளிர் டி20 தரவரிசையில் பௌலர்கள் பிரிவில் முதலிடத்தில் இருக்கும் இந்திய ஸ்பின்னர் ஸ்ரீ சரணி, தனது தரவரிசை புள்ளிகளை 804-ஆக அதிகரித்துக் கொண்டுள்ளார்.

(i) மகளிர் தரவரிசையில் பேட்டர்கள் மற்றும் பௌலர்கள் பிரிவில், அதிகபட்ச புள்ளிகளைப் பெற்ற இந்தியராக அவர் சாதனை படைத்தார். இதற்கு முன், இந்திய முன்னாள் கேப்டன் மிதாலி ராஜ், பேட்டர்கள் பிரிவில் 780 புள்ளிகளை (2011) பெற்றதே அதிகமாக இருந்த நிலையில், தற்போது ஸ்ரீ சரணி அதை கடந்திருக்கிறார்.

(ii) அண்மையில் நிறைவடைந்த மகளிர் ஆசிய கோப்பை டி20 கிரிக்கெட் போட்டியில் இந்தியா சாம்பியன் ஆனது. அந்தப் போட்டியின் அடிப்படையில் தரவரிசையில் ஏற்ற, இறக்கங்கள் நிகழ்ந்துள்ளன.

7.அஸ்ஸாமில் 3,260 ஒற்றைக் கொம்பு காண்டாமிருகங்கள் உள்ளன. இவை உலகில் உள்ள மொத்த ஒன்றை கொம்பு காண்டாமிருகங்களின் எண்ணிக்கையில் 80 சதவீதம் என்று அந்த மாநில முதல்வர் ஹிமந்த விஸ்வ சர்மா தெரிவித்தார்.

(i) சர்வதேச அளவில் அதிகம் வேட்டையாடப்படும் விலங்குகள் பட்டியலிலும், குறைந்து வரும் வனவிலங்குகள் பட்டியலிலும் இந்த வகை காண்டாமிருகங்கள் உள்ளன.

(ii) இது தொடர்பாக சமூக ஊடகத்தில் ஹிமந்த விஸ்வ சர்மா வெளியிட்ட பதிவில், 'கடந்த 2025-ஆம் ஆண்டு அஸ்ஸாமில் ஒரு காண்டாமிருகம் கூட வேட்டையாடப்பட வில்லை. இறுதியாக எடுக்கப்பட்ட கணக்கெடுப்பின்படி 3,260 காண்டாமிருகங்கள் அஸ்ஸாமில் உள்ளன. முன்பைவிட இப்போது எண்ணிக்கை சற்று அதிகரித்துள்ளது. உலகில் ஒட்டுமொத்தமாக 4,075 காண்டாமிருகங்கள் மட்டுமே உள்ளன. அவற்றில் 80 சதவீத எண்ணிக்கை அஸ்ஸாமில் உள்ளன.

(iii) மிகவும் அரிய வகை விலங்கினமான இவற்றுக்கு மிகவும் பாதுகாப்பான இடமாக அஸ்ஸாம் திகழ்கிறது. அந்த விலங்கினத்தை தொடர்ந்து பாதுகாப்பதிலும், அவற்றின் எண்ணிக்கையை அதிகரிக்க பாதுகாப்பு வசதிகளை உருவாக்குவதிலும் அஸ்ஸாம் உறுதியாக உள்ளது என்று அவர் தனது பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

8.மகாராஷ்டிர மாநிலம் ராய்கட்டில் உள்ள திகே துறை முகத்தில் நாட்டின் மிகப்பெரிய கப்பல் கட்டும் தளம் அமைக்கப்பட உள்ளது.

(i) இதில், பாதுகாப்பு பொதுத் துறை நிறுவனமான மஸகோன்டாக் கப்பல் கட்டும் நிறுவனம் (எம்டிஎல்) ரூ.27,000 கோடியை முதலீடு செய்ய உள்ளது. இது குறித்து அரசு செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

- ராய்கட் டில்நாட்டின் மிகப் பெரிய கப்பல் கட்டும் தளம் அமைக்கும் ஒப்பந்தம், மும்பையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் மாநில முதல்வர் தேவேந்திர ஃபட்னவீஸ் முன்னிலையில் தேசிய கப்பல் கட்டும் மற்றும் கனரக நிறுவனங்கள் பூங்கா மகாராஷ்டிர நிறுவனத்துடன் (என்எஸ்ஹெச்ஐபிஎம்எல்) எம்டிஎல் நிறுவனம் கையொப்பமிட்டது.
- இந்த ஒப்பந்தத்தின்படி, திகி துறைமுகத்தில் ஆண்டுக்கு குறைந்தபட்சம் 2 மில்லியன் டன் கப்பல் கட்டும் திறனை உருவாக்கும் இலக்கை எம்டிஎல் நிறுவனம் நிர்ணயித்துள்ளது. இதற்காக, ரூ.27,000 கோடியை இந்த நிறுவனம் முதலீடு செய்ய திட்டமிட்டுள்ளது. இங்கு மிகப் பெரிய வணிக கப்பல்கள், போர்க் கப்பல்கள் கட்டப்படுவதன் மூலம், நாட்டின் கடல்சார் தொழில் நிறுவனங்களின் திறன் வலுப்பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.
- மத்திய, மாநில அரசுகள் சார்பில் கூட்டாக மேம்படுத்தப்படும் இந்தத் திட்டத்தின் மூலம் நேரடியாக 15,000 பேருக்கும், மறைமுகமாக 75,000 பேருக்கும் வேலைவாய்ப்பு கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது என்று தெரிவிக்கப்பட்டது.

9.இந்தியா-நியூஸிலாந்து இடையிலான தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் அக்டோபர் 19-ஆம் தேதி அமலுக்கு வரும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

(i) இரு நாடுகள் இடையே கடந்த ஏப்ரல் 27-ஆம் தேதி தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் கையொப்பமானது. இருதரப்பு பொருள்கள் வர்த்தகம், சேவைகள், முதலீடு ஆகியவற்றை அதிகரிக்கும் நோக்கில் இந்த ஒப்பந்தம் எட்டப்பட்டது. இதன்மூலம் இந்திய ஏற்றும திப்பொருள்களுக்கு நியூஸிலாந்து எவ்வித வரியும் விதிக்கப்படாது என்று உறுதியளிக்கப்பட்டது.

(ii) செராமிக் பொருள்கள், தரைவிரிப்புகள், பல்வேறு இயந்திரங்கள், வாகன உதிரிபாகங்கள் உள்ளிட்டவை இந்தியாவில் இருந்து நியூஸிலாந்துக்கு அதிகம் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. இவற்றுக்கு இப்போது அதிகபட்சமாக 10 சதவீதம் வரி விதிக்கப்படுகிறது. இந்த வரி நீக்கப்படும்போது, இந்திய ஏற்றுமதியாளர்களுக்கு அந்நாட்டில் மிகப்பெரிய வாய்ப்புகள் கிடைக்கும். பிற நாடுகளை விடக் குறைவான செலவில் அங்கு பொருள்களை அனுப்பிவைக்க முடியும். இந்தியாவில் அடுத்த 15 ஆண்டுகளில் 20 பில்லியன் டாலர் முதலீடு செய்ய இருப்பதாக நியூஸிலாந்து ஏற்கெனவே அறிவித்துள்ளது.

10.வெளிநாட்டு மாணவர்களின் தங்குதல் மற்றும் கல்வி பயிலுதல் மீதான கட்டுப்பாடுகளுக்கு அமெரிக்க நீதிமன்றம் இடைக்காலத் தடை உத்தரவு

(i) நீதிமன்றத் தலையீடு மற்றும் உடனடி நிவாரணம்

- அமெரிக்காவில் வெளிநாட்டு மாணவர்கள் தங்குவது மற்றும் கல்வி பயில்வது தொடர்பான புதிய கட்டுப்பாடுகளைச் செயல்படுத்துவதைத் தடுத்து நிறுத்தி, மசாசூசெட்ஸில் உள்ள அமெரிக்க ஃபெடரல் மாவட்ட நீதிமன்றம் இடைக்காலத் தடை உத்தரவை பிறப்பித்தது.
- புதிய விசா விதிகள் செப்டம்பர் 15 அன்று நடைமுறைக்கு வரவிருந்த நிலையில், அதற்கு ஒரு நாள் முன்னதாகவே இந்த நீதிமன்ற உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.
- இந்தத் தடை உத்தரவு, அமெரிக்காவில் உயர்கல்வி பயிலும் ஏராளமான இந்திய மாணவர்கள் உட்பட ஆயிரக்கணக்கான வெளிநாட்டு மாணவர்களுக்குப் பெரிய தற்காலிக நிவாரணத்தை அளிக்கிறது.

(ii) முன்மொழியப்பட்ட விதியின் கீழ் உள்ள முக்கிய கட்டுப்பாடுகள்

- டிரம்ப் நிர்வாகத்தின் முன்மொழியப்பட்ட கொள்கையின்படி, குடியேறாதோருக்கான 'F' விசா மற்றும் பரிமாற்றத் திட்ட வருகையாளர்களுக்கான 'J' விசா மூலம் வரும் வெளிநாட்டு மாணவர்களின் தங்கும் காலம் அதிகபட்சம் 4 ஆண்டுகள் அல்லது அவர்களின் கல்வித் திட்டத்தின் துல்லியமான கால அளவு என வரையறுக்கப்பட்டது.
- முழுநேர மாணவர் தகுதியைத் தக்கவைத்துக் கொள்ளும் வரை வெளிநாட்டு மாணவர்கள் காலவரையின்றி அமெரிக்காவில் தங்குவதற்கு அனுமதித்த நீண்டகாலக் கொள்கையை முடிவுக்குக் கொண்டுவருவதை இம்முன்மொழிவு நோக்கமாகக் கொண்டிருந்தது.

(iii) அவகாசக் காலம் மற்றும் ஊடகவியலாளர் விசா வரம்புகள் குறைப்பு

- 'F' விசா வைத்திருப்பவர்கள் அமெரிக்காவை விட்டு வெளியேறவோ, வேறொரு கல்வி நிறுவனத்திற்கு மாறவோ அல்லது விசா நிலையை மாற்றவோ அனுமதிக்கப்பட்டிருந்த 'படிப்புக்குப் பிந்தைய அவகாசக் காலம்' (grace period), 60 நாட்களிலிருந்து 30 நாட்களாகக் குறைக்கப்பட்டது.
- வெளிநாட்டு ஊடகவியலாளர்களுக்கான 'I' விசா கால அளவு அதிகபட்சம் 240 நாட்களாக வரையறுக்கப்பட்டது; அதேவேளையில் சீன ஊடகவியலாளர்களுக்கு 90 நாட்கள் என்ற கடுமையான வரம்பு விதிக்கப்பட்டது.

(iv) சட்டரீதியான சவால் மற்றும் நிர்வாகத்தின் வாதங்கள்

- பல உயர்கல்வி நிறுவனங்கள், அமைப்புகள் மற்றும் தொழிலாளர் சங்கங்கள் ஆகியவை மசாசூசெட்ஸ் மாவட்ட நீதிமன்றத்தில் நீதிபதி எஃப். டென்னிஸ் சேலர் முன்னிலையில் இக்கட்டுப்பாடுகளை எதிர்த்து வழக்குத் தொடர்ந்தன.
- விசா மோசடியைக் கட்டுப்படுத்தவும், விசா காலம் முடிந்த பிறகும் வெளிநாட்டினர் தொடர்ந்து தங்குவதைத் தடுக்கவும் கடுமையான கால வரம்புகள் அவசியம் என்று அமெரிக்க உள்நாட்டுப் பாதுகாப்புத் துறை (Department of Homeland Security) வாதிட்டது.

11. UPI வணிகப் பரிவர்த்தனைகளுக்கான கட்டணங்கள்

*(i) MDR கட்டண அமைப்பு மற்றும் உச்சவரம்புகள்*

- *UPI அல்லது RuPay அட்டைகள் மூலம் மேற்கொள்ளப்படும் ₹2,000-க்கு மேற்பட்ட வணிகப் பரிவர்த்தனைகளுக்கு, பரிவர்த்தனைக்கு 0.4% என்ற விகிதத்தில் வணிகர் தள்ளுபடி விகிதக் கட்டணம் (MDR) வசூலிக்கப்படும்.*
- *₹75,000 மற்றும் அதற்கு மேற்பட்ட பரிவர்த்தனைகளுக்கு, ஒரு பரிவர்த்தனைக்கு அதிகபட்சமாக ₹300 என்ற கட்டண உச்சவரம்பு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.*
- *இந்திய ரயில்வே, தொலைத்தொடர்பு மற்றும் எரிபொருள் விநியோகம் உள்ளிட்ட அத்தியாவசிய பொதுச் சேவைத் துறைகளுக்கு, ஒரு பரிவர்த்தனைக்கு ₹5 என்ற நிலையான கட்டணம் விதிக்கப்படும்.*
- *Mutual funds மற்றும் பங்குகளில் முதலீடு செய்வது உள்ளிட்ட மூலதனச் சந்தைப் பரிவர்த்தனைகளுக்கு, பரிவர்த்தனைக்கு 0.02% என்ற குறைக்கப்பட்ட MDR விகிதம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.*

*(ii) விலக்குகள் மற்றும் விலக்கப்பட்ட பிரிவுகள்*

- *மொத்த UPI வணிகப் பரிவர்த்தனைகளில் 95% முதல் 96% வரை உள்ள, ₹2,000 அல்லது அதற்குக் குறைவான மதிப்புள்ள UPI வணிகப் பரிவர்த்தனைகளுக்கு MDR கட்டணம் எதுவும் விதிக்கப்படாது.*
- *UPI பரிவர்த்தனைகள் மூலம் மாதத்திற்கு ₹1 லட்சம் வரை வருமானம் ஈட்டும் சிறு வணிகர்களுக்கு MDR கட்டணத்திலிருந்து முழு விலக்கு அளிக்கப்படுகிறது.*
- *தனிநபர்களுக்கு இடையே மேற்கொள்ளப்படும் பணப் பரிமாற்றங்களுக்கு (person-to-person money transfers) MDR கட்டணத்திலிருந்து முழு விலக்கு தொடர்கிறது.*

*(iii) அமலாக்கத் தேதி மற்றும் ஒழுங்குமுறை அமைப்பு*

- *இந்தக் கட்டணக் கட்டமைப்பு, வங்கிகள் மற்றும் டிஜிட்டல் கட்டணச் சேவை வழங்குநர்களின் பிரதிநிதிகளைக் கொண்ட 22 உறுப்பினர்கள் அடங்கிய 'UPI மற்றும் பிற சேவைகள் வழிகாட்டுதல் குழுவால்' அங்கீகரிக்கப்பட்டு, இந்திய தேசிய கட்டணக் கழகத்தால் (NPCI) அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்பட்டது.*
- *புதிய MDR கட்டண வசூல் முறை 2026 அக்டோபர் 15 முதல் நடைமுறைக்கு வரும்.*

*(iv) வணிகர்களுக்கான விதிகள் மற்றும் உள்கட்டமைப்பு நிதி ஒதுக்கீடு*

- *MDR கட்டணச் சுமையை வாடிக்கையாளர்கள் மீது சுமத்துவதற்கு வணிகர்களுக்குக் கடுமையான தடை விதிக்கப்பட்டுள்ளது; அதேபோல், பயனர்களிடம் தளக் கட்டணங்களை (platform fees) வசூலிப்பதிலிருந்து கட்டணச் சேவை வழங்குநர்கள் தடுக்கப்பட்டுள்ளனர்.*
- *விதிமுறைகள் பின்பற்றப்படுவதை உறுதி செய்யவும், நுகர்வோர் மீது வணிகர்கள் கூடுதல் கட்டணம் (surcharge) விதிக்காமல் இருப்பதை உறுதி செய்யவும் வங்கிகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.*
- *வசூலிக்கப்படும் மொத்தக் கட்டணத் தொகையில் ஐந்தில் ஒரு பங்கு (20%), டிஜிட்டல் உள்கட்டமைப்பிற்கு நிதியளிப்பதற்கும், சிறு வணிகர்களுக்கான UPI பயன்பாட்டை விரிவுபடுத்துவதற்கும் ஒதுக்கப்படும். (v) சட்டப் பின்னணி மற்றும் அரசின் விளக்கம்*
- *'பணம் செலுத்துதல் மற்றும் தீர்வு அமைப்புகள் சட்டம், 2007'-ன் பிரிவு 10-ஐ (இது முன்பு டிஜிட்டல் பணப் பரிவர்த்தனைகளுக்கு வங்கிகள் கட்டணம் வசூலிப்பதைத் தடை செய்திருந்தது) திருத்தும் வகையில், 'வரிகள் மற்றும் பிற சட்டங்கள் (திருத்த) மசோதா, 2026'-ஐ மத்திய அரசு நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் அறிமுகப்படுத்தி நிறைவேற்றியது.*
- *இந்த முடிவு, ஜனவரி 2020 முதல் அமலில் இருந்த 'பூஜ்ஜிய-MDR' (Zero-MDR) கொள்கைக்கு முற்றுப்புள்ளி வைக்கிறது; இதன் மூலம் நிதி நிலைத்தன்மை குறித்த வங்கிகள் மற்றும் நிதி-தொழில்நுட்ப (fintech) நிறுவனங்களின் நீண்டகாலக் குறைகளுக்குத் தீர்வு காணப்படுகிறது.*
- *இச்சட்டம் நுகர்வோர் மீது எந்தவொரு வரியையோ அல்லது கட்டணத்தையோ விதிக்கவில்லை என்று மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் தெளிவுபடுத்தினார்; அதிக மதிப்புள்ள பரிவர்த்தனைகளை மேற்கொள்ளும் ஒரு சிறிய சதவீத வணிகர்களுக்கு மட்டுமே இக்கட்டணங்கள் பொருந்தும்.*

*12. லண்டனில் ரூ.15,300 கோடிக்கும் அதிகமான முதலீட்டு முன்மொழிவுகள்: தமிழ்நாடு அரசு*

*(i) மாநிலத்திற்கு நேரடி அந்நிய முதலீடுகளை ஈர்க்கும் நோக்கில், தமிழ்நாடு முதலமைச்சர் சி. ஜோசப் விஜய் இங்கிலாந்தின் லண்டனுக்கு 6 நாள் அரசுமுறைப் பயணம் மேற்கொண்டார்.*

*(ii)* இப்பயணத்தின் போது, ₹15,300 கோடிக்கும் அதிகமான மதிப்பிலான முதலீட்டு முன்மொழிவுகள், புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் (MoUs) மற்றும் விருப்பக் கடிதங்கள் (Letters of Intent) ஆகியவை கையெழுத்திடப்பட்டு இறுதி செய்யப்பட்டன.

*(iii)* வரவிருக்கும் இத்திட்டங்கள் மூலம் தமிழ்நாடு முழுவதும் 10,000-க்கும் மேற்பட்ட நேரடி மற்றும் மறைமுக வேலைவாய்ப்புகள் உருவாக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

*(iv)* இந்த ஒப்பந்தங்கள் வாகன உதிரிபாகங்கள் உற்பத்தி, ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு (R&D), புதுப்பிக்கத்தக்க எரிசக்தி, மின்சக்தி உபகரணங்கள் மற்றும் உலகளாவிய திறன் மையங்கள் (GCCs) உள்ளிட்ட முக்கியத் தொழில் துறைகளை உள்ளடக்கியுள்ளன.

*(v)* மூலப்பொருட்களைப் பெறுவதற்காக இங்கிலாந்து வணிக நிறுவனங்களுக்கும் தமிழ்நாட்டின் ஜவுளி உற்பத்தியாளர்களுக்கும் இடையே கொள்முதல் ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டன.

*(vi)* உள்கட்டமைப்பு மற்றும் உற்பத்தித் துறை சார்ந்த கூட்டாண்மைகளை ஆராய்வதற்காக, விண்வெளி மற்றும் பாதுகாப்புத் துறைப் பிரதிநிதிகளைக் கொண்ட இங்கிலாந்து குழுவினர் ஓசூருக்கு வருகை தரவுள்ளனர்.

*(vii)* நகர்ப்புற நிர்வாகம் மற்றும் வர்த்தக உறவுகளை வலுப்படுத்தும் நோக்கில், லண்டன் மேயர் அமைப்பின் பிரதிநிதிகள் 2026 அக்டோபரில் சென்னைக்கு வருகை தரத் திட்டமிடப்பட்டுள்ளது.